DECEMBER 2022 **U/ID 33220/UNT4A**

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு 30 சொற்களில் விடை எழுதுக.

1. சர்னல் என்பதன் பொருள் யாது?
2. மரபுவழி சாதனம் குறித்து எழுதுக.
3. நாளிதழ் குறித்து எழுதுக.
4. அசோகரின் கல்வெட்டு குறிப்பு வரைக.
5. காகிதக் கண்டுபிடிப்பு குறித்து சுருக்கி வரைக.
6. செய்தி அனுப்பப் பயன்படுத்தப்பட்ட விலங்கு எது?
7. தேசபக்தன் இதழின் சிறப்பை எழுதுக.
8. தமிழ் இதழ்களின் தொடக்க நிலையை எழுதுக.
9. செய்திகளின் வகைகளை எழுதுக.
10. நீதிமன்ற அவமதிப்புச் சட்ட விதியை எழுதுக.
11. பக்க வடிவமைப்பு அமைக்கும் முறையை குறிப்பிடுக.
12. தமிழில் மொழிநடை நூலை உருவாக்கியவர் யார்?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு 200 சொற்களில் விடை எழுதுக

13. இதழியல் பற்றி பல அறிஞர்களின் கருத்துகளை விளக்குக.

14. இதழ்களை எவ்வாறெல்லாம் பகுக்கலாம்? விளக்குக.

15. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்திய இதழியலின் நிலையை விளக்குக.

16. இராஜாராம் மோகன்ராயும் இதழியலும் குறித்து எழுதுக.

17. கிருத்துவப் பாதிரியார்கள் இதழ்களுக்கு செய்த தொண்டினை விளக்குக.

18. நாடாளுமன்ற நடவடிக்கைச் சட்ட விதிகளை எழுதுக.

19. செய்தி துணையாசிரியரின் பணிகளை எழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு 500 சொற்களில் விடை எழுதுக.

20. இதழியலின் இலக்கணத்தையும் வகைகளையும் கட்டுரைக்க.

21. இதழியலாளரின் சிறப்புத் திறன்களைப் புலப்படுத்துக.

22. விடுதலை இயக்க காலத்தில் தமிழ் இதழ்களின் நிலையை விவரிக்க.

23. செய்தித்தாளின் நிர்வாக அமைப்பு முறையை விவரிக்க.

24. இதழியலில் மொழிநடையின் தனித்துவத்தை ஆராய்க.

———————